

# தி.மு.க. இளைஞர் அணி

# இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 29.03.2025 | ஈரோடு வடக்கு | கோபிச்செட்டிப்பாளையம் | ரவுண்டானா, புளியம்பட்டி ரோடு, நம்பியூர் | மாண்புமிகு கோவி.செழியன், பி.மகேஷ் |
| 2 | 29.03.2025 | தருமபுரி கிழக்கு | தருமபுரி | பி.எஸ்.என்.எல். அலுவலகம் அருகில், தருமபுரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, அ.பொர்த்தி வினித் |
| 3 | 29.03.2025 | நாமக்கல் கிழக்கு | சேந்தமங்கலம் | செம்மேடு பேருந்து நிலையம், கொல்லிமலை | திண்டுக்கல் ஐ.லியோனி, ப.முத்து பாண்டி |
| 4 | 29.03.2025 | சேலம் மேற்கு | மேட்டூர் | வைத்தீஸ்வரா மேல்நிலைப்பள்ளி எதிரில், பி.என்.பட்டி | வே.மதிமாறன், முனைவர் எஸ்.திவ்யா |
| 5 | 29.03.2025 | கரூர் | அரவக்குறிச்சி | பரமத்தி | இந்திரகுமார் தேரடி, ச.சேது விநாயகம் |
| 6 | 29.03.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | ஒசூர் | மத்திகிரி | செந்தில்வேல், வே.சீனிவாசன் |
| 7 | 29.03.2025 | தூத்துக்குடி தெற்கு | திருவைகுண்டம் | பேருந்து நிலையம், ஆழ்வார் திருநகர் | உமா, கே.வி.விஜயன் |
| 8 | 29.03.2025 | தஞ்சாவூர் மத்திய | திருவையாறு | திருவையாறு தேரடித் திடல், திருவையாறு | நாஞ்சில் சம்பத், வீ.சதீஷ் |
| 9 | 29.03.2025 | புதுக்கோட்டை தெற்கு | அறந்தாங்கி | பேருந்து நிலையம், அறந்தாங்கி | மில்ட்டன், சொ.தமிழினியன் |
| 10 | 29.03.2025 | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | அண்ணா அரங்கம், ராஜாஜி பூங்கா, வேதாரண்யம் | ராஜகம்பீரன் அப்பாஸ், ர.அகிலா |
| 11 | 29.03.2025 | இராணிப்பேட்டை | அரக்கோணம் | தேரடி அருகில், தக்கோலம் | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், சே.அசாருதீன் |
| 12 | 29.03.2025 | மதுரை மாநகர் | மதுரை மத்திய | சுப்பிரமணியபுரம் | கோவி.லெனின், நா.நவீன் |
| 13 | 30.03.2025 | சேலம் மேற்கு | சங்ககிரி | கலைஞர் சிலை அருகில், தாரமங்கலம் | நாஞ்சில் சம்பத், ம.மோகநிதி |
| 14 | 30.03.2025 | கரூர் | கிருஷ்ணராயபுரம் | வெள்ளியணை | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.தமதி |
| 15 | 30.03.2025 | திருப்பூர் வடக்கு | அவினாசி | ரவுண்டானா அருகில், சேவூர் | இந்திரகுமார் தேரடி, ச.நாகராஜ் |
| 16 | 30.03.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | ஊத்தங்கரை | ரவுண்டானா அருகில், நால் ரோடு | செந்தில்வேல், ர.ராஜேஷ் |
| 17 | 30.03.2025 | மதுரை வடக்கு | மேலூர் | பேருந்து நிலையம், மேலூர் | திருச்சி சிவா எம்.பி., ப.பிரசாந்த் |
| 18 | 30.03.2025 | மயிலாடுதுறை | சீர்காழி | பழைய பேருந்து நிலையம், சீர்காழி | மில்ட்டன், இரா.மதுமிதா |
| 19 | 30.03.2025 | திருப்பத்தூர் | ஆம்பூர் | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் ரோடு | மருத்துவர்.எஸ்.ஏ.எஸ்.ஹஃபீசுல்லா, மகிழவன் |
| 20 | 30.03.2025 | திருவள்ளூர் மேற்கு | திருவள்ளூர் | இரயில் நிலையம், திருவள்ளூர் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, க.ரா.சந்தியா |
| 21 | 30.03.2025 | திருவாரூர் | மன்னார்குடி | அண்ணா சிலை அருகில், வடுவூர் | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அக்ஷயா |
| 22 | 31.03.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் தெற்கு | சேரன் காலனி, ராக்கியாபாளையம், நல்லூர் | செந்தில்வேல், ப.விஜயராஜ் |
| 23 | 31.03.2025 | விழுப்புரம் தெற்கு | விக்கிரவாண்டி | காணை தெற்கு ஒன்றியம், கொடார் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.ரோஜா |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 27–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

நூறு நாள் வேலை உறுதித் திட்ட நிதியை வழங்காத - ஒன்றிய பா.ஜ.க.வுக்கு எதிராக

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

செஞ்சி, மார்ச் 29-

செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசியதாவது:-



தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின்அறிவுறுத்தலின்படி ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்குவது குறித்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள்நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காமல் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் தமிழ் நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் இன்று (29.3.2025 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பில் பயன் பெறுவோரை திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும்.

மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

---

விழுப்புரம் தொகுதியில்

# கண்டமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனியாக தாலுகா உருவாக்குவீர்!

## சட்டப் பேரவையில் டாக்டர் இரா.இலட்சுமணன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 29 -

சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது விழுப்புரம் தொகுதி உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், கண்டமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனியாக தாலுகா உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:



**டாக்டர் இரா.இலட்சுமணன்:** வானூர் மற்றும் விழுப்புரம் தொகுதிக்குட்பட்ட கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 46 கிராம ஊராட்சிகள் உள்ளன. அதில் 31 கிராம ஊராட்சிகள் விழுப்புரம் தாலுகாவிலும், 15 கிராம ஊராட்சிகள் விக்கிரவாண்டி தாலுகாவிலும் அமைந்துள்ளன. எனவே, மக்களின் நலன் கருதி கண்டமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, தனியாக தாலுகா உருவாக்கப்படுமா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** இது போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதில், எதெல்லாம் தகுதியாக இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து, அதன்மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும். அதிலே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்தப் பகுதி அதற்கு தகுதி இருக்குமென்று சொன்னால் நிச்சயமாக நாங்கள் செய்து கொடுப்போம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.